Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்








| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 54 | உள்ளூர் - 23.02.2026 | திங்கள் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 54 | * Issue 54 | வெளியூர் - 24.02.2026 | செவ்வாய் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**வீட்டில் பணப் பிரச்சனைகள் இருக்கா..?** | **எய்ம்ஸ் 3000+ காலியிடங்கள்** | **தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு!** | **முடி மாற்று சிகிச்சை மையங்களுக்கு கட்டுப்பாடு!**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், ரெட்டேரி சந்திப்பில் 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன பயணியர் நிழற்குடை மற்றும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேப்பர் மில்ஸ் சாலை, ரெட்டேரி சந்திப்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1.61 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட கொளத்தூர் பேருந்து நிறுத்தத்தை பயணிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பள்ளிகல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்பாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, திரு. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுயம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ். பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி மாளிகையில் லூட்யன்ஸ் சிலைக்கு பதிலாக ராஜாஜி சிலை!

புதுடெல்லி, பிப். 23–

ஜனாதிபதி மாளிகையில் பிரிட்டீஷ் கட்டட கலைஞர் எட்வின் லுட்யன்ஸின் சிலை மாற்றப்பட்டு அந்த இடத்தில் ராஜாஜி சிலை அமைக்கப்பட உள்ளது. 1947ல் சுதந்திரம் அடைந்த பிறகும், பிரிட்டிஷ் அதிகா ரிகளின் சிலைகள் ஜனா திபதி மாளிகையில் இருந்தன. தற்போது இது மாற்றப்பட்டு, இந்திய தலைவர்களுக்கு மரியாதை செய்யப்படுகிறது. காலனித்து வத்தை முற்றிலுமாக அழிக்கும் வகையில், அதன் அடையாளங்களை அகற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.



அந்த வகையில் ஜனாதிபதி மாளிகையில் (ராஷ்டிரபதி பவன்) உள்ள பிரிட்டிஷ் கட்டடக் கலைஞர் எட்வின் லுட்யென்ஸ் சிலை அகற்றப்பட்டு, சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் சி.ராஜகோபாலாச்சாரி (ராஜாஜி) சிலை நிறுவப்பட்டு உள்ளது. இந்த ராஜாஜி சிலையை இன்று பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

காலனித்துவ ஆதிக்கத்தின் அடையாளங்களை மாற்றி, இந்திய கலாசார அடையாளங்களைப் போற்றும் முயற்சி யாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரம் அடைந்த பிறகும், ஜனாதிபதி மாளிகையில் பிரிட்டிஷாரின் சிலைகளே நிறுவப்பட்டன.

அந்த மரபை உடைத் தெறியும் வகையில், நம் நாட்டின் முதல் மற்றும் கடைசி கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜியின் உருவச்சிலை திறக்கப்படுவதாக பிரதமர் மோடி தெரிவித்தார்.

## விஜய் கொடுத்த வாக்குறுதி; எனக்கும் ஸ்டாலினுக்கும் நடக்கிற போர் இது! - விஜய் பேச்சு!

வேலூர், பிப். 23–

வருகிற சட்டப்பேரவைத் தேர்தல், தனக்கும் ஸ்டாலின் சாருக்கும் நடக்கிற போர் என வேலூரில் நடைபெற்ற கூட்டத்தில் தவெக தலைவர் விஜய் பேசியுள்ளார்.

வேலூர் மாவட்டம் அகரம்சேரியில் தமிழக வெற்றிக் கழகத்தின் மக்கள் சந்திப்பு மற்றும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தவெக தலைவர் விஜய் பேசி வருகிறார்.

கூட்டத்தில் அவர் பேசியதாவது,

“மக்களை நேசிக்கும் ஒரு நல்ல தலைமை இல்லாததால் இத்தனை ஆண்டுகளாக வேறு வலியில்லாமல் ஸ்டாலின் சார் கொடுத்த பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றம் அடைந்த மக்களுக்கு சரியான நேரத்தில் ஒரு வெகுஜன மக்கள் இயக்கமாக வந்ததுதான் நம்முடைய தவெக.

நாம் ஒவ்வொரு வீட்டில் உயிராக உணர்வாக இருக்கிறோம். ஒவ்வொரு ஊராகச் சென்று உங்களை எல்லாம் சந்திக்க வேண்டும் என்றுதான் எனக்கு ஆசை. ஆனால் எதிர்க்கட்சியாக இருக்கும் நமக்கு எதிராக நடைபெறும் சூழ்ச்சிகள் பற்றி உங்கள் எல்லாருக்கும் தெரியும். அதனால் ஒரு வாக்குறுதி அளிக்கிறேன். நம்முடைய ஆட்சி அமைந்ததும் நான் ஒவ்வொரு கிராமத்திற்கும் நேரடியாக வந்து என்னுடைய சொந்தங்களை எல்லாம் சந்திப்பேன்.

வரும் தேர்தல் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான தேர்தல். தமிழ்நாட்டுக்கும் தில்லிக்கும்தான் தேர்தல் என்றும் தமிழ்நாட்டுக்கும் என்டிஏ–க்கும்தான் தேர்தல் என்றும் முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார். இதென்ன நாடாளுமன்றத் தேர்தலா? பிரதமர் பதவிக்கு போட்டியிடுகிறாரா?

தமிழ்நாட்டு மக்களுக்கு எந்த தேர்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று தெரியும். தமிழ்நாட்டு மக்கள் மிகத் தெளிவான சூப்பர் மக்கள்.




உண்மையில் இந்த தேர்தல் தமிழ்நாட்டு மக்களுக்கும் ஊழலுக்கும் நடக்கிற போர். தமிழ்நாட்டு மக்களுக்கும் லஞ்சத்துக்கும் நடக்கிற போர். சரியான நிர்வாகம் செய்யாத திமுக அரசுக்கும் தவெகவுக்கும் இடையே நடக்கிற போர். தமிழ்நாட்டு மக்களுக்கும் ஸ்டாலின் சாருக்கும் நடக்கிற போர். விஜய்க்கும் ஸ்டாலின் சாருக்கும் நடக்கிற போர். தமிழ்நாடு தான் விஜய், விஜய் தான் தமிழ்நாடு ‘ தூயசக்தி தவெகவுக்கும் தீய சக்தி திமுகவுக்கும் இடையே நடக்கிற போர். காமராஜர், அண்ணா, எம்ஜிஆர் ஆட்சியில் தமிழ்நாடு சூப்பர் மாநிலமாக இருந்தது. ஆனால் இப்போது இல்லை. 2026 தேர்தலில் தவெக தில்லாக நிற்கும்.

ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் நடக்கிற தேர்தல் அல்ல. 50 ஆண்டுக்கு ஒருமுறை நடக்கும் தேர்தல் மாதிரி. இது அதிசய தேர்தல். லஞ்சம், ஊழலை எதிர்ப்பதால் ஒட்டுமொத்தமாக அனைவரும் சேர்ந்து என்னை எதிர்க்கிறார்கள்.

வரும் தேர்தலில் திமுகவும் தவெகவுக்கும்தான் போட்டியே’’ என்று பேசினார். விஜய் கூறிய குட்டிக்கதையில் தெரிவித்ததாவது:

ஒரு பெரிய ஊரில் நான்கு வழிச் சந்திப்பு இருக்கிறது. அதன் நடுவில் முரட்டு ஜல்லிக்கட்டு காளை நிற்கிறது. யாரும் பக்கத்தில் போக முடியவில்லை. காளையை அடக்கினால்தான் அந்த இடம் இயல்பு நிலைக்கு திரும்பும்.

அப்போது அந்த கூட்டத்தில் இருந்த சிலர், எங்களுக்கு இல்லாத அனுபவமா? நாங்கள் பார்க்காத காளையா? என சிலர் சென்று அடக்க நினைத்தார்கள். ஆனால் அனைவரையும் காளை தூக்கி வீசியது. அப்போது கூட்டத்தை விலக்கி ஒரு சின்ன பையன் செல்கிறான். அவனை பார்த்து எங்களால் முடியவில்லை நீ என்ன செய்ய போற, அனுபவமுள்ள நாங்களே அடிபட்டு கிடக்கிறோம் என பேசுகிறார்கள். மற்றொரு பக்கம் பரிதாபப்படுகிறார்கள்.

இவற்றை பற்றியெல்லாம் கவலைப்படாத சின்ன பையன் காளை அருகே சென்று, இரண்டு பாக்கெட்டில் இருந்து புல்லுக்கட்டை எடுத்து காளைக்கு கொடுக்கிறான். அந்த காளை புல்லுக்கட்டை சாப்பிட ஆரம்பித்து விட்டது. சின்ன பையன் அருகே காளை குழந்தையைப் போல் நடந்து வந்தது.

அடிபட்ட அனுபவசாலிகள் தலையைத் தொங்கப்போட்டு இருந்தார்கள். அங்குவந்த பெரியவர் முரட்டு காளையை எப்படி அடக்கின என்று கேட்டார். அந்த காளையைப் பார்த்தால் எனக்கு கோபமாக இருந்ததாக தெரியவில்லை. பசியோடு இருந்ததாகதான் தெரிந்தது, அதனால் உணவு கொடுத்தேன், அதுவும் என்னோடு வந்துவிட்டது என்றான். இதைகேட்ட பெரியர் சொன்னார், சின்னவங்க, பெரியவங்க, அனுபவம் உள்ளவங்க, இல்லாதவங்க என எதுவும் இல்லை. சூழ்நிலைக்கு ஏற்றவாறு என்ன செய்து பிரச்னையை தீர்க்கிறான் என்பதுதான் முக்கியம் என பெரியர் தட்டிக் கொடுத்தார்.

இந்த கதையில் முரட்டு காளைதான் அரசியல் களம், பெரியவர்தான் மக்கள், சின்ன பையன்தான் நானும் தவெகவும். நல்ல தலைமை இல்லாததால் ஸ்டாலின் கொடுத்த பொய்யான வாக்குறுதியை நம்பி ஏமாந்த மக்கள் மத்தியில் வெகுஜன கட்சியாக வந்ததுதான் தவெக’’ எனத் தெரிவித்தார்.

## தமிழ்நாடு முழுவதும்

# இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு

## தமிழகத்தில் 5.43 கோடி வேட்பாளர்கள்

சென்னை, பிப். 23–

தமிழகம் முழுவதும் அந்தந்த மாவட்ட கலெக்டர்களால் இறுதி வாக்களார் பட்டியல் வெளியிடப்பட்டு உள்ளது. எஸ்ஐஆர் பணிகளுக்கு பிறகு, தமிழகத்தின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5.43 கோடி.

தமிழகத்தில் ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலை ஒட்டி வாக்காளர் பட்டியலை திருத்தும் பணிகளை, தலைமை தேர்தல் கமிஷன் 2025ல் துவக்கியது. இதற்காக, நவம்பர் 4 முதல் டிசம்பர் 14 வரை, எஸ்.ஐ.ஆர்., எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணி நடந்தது. இதை தொடர்ந்து, வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 19ம் தேதி வெளியிடப்பட்டது.

அதன்படி, 2025 அக்டோபர் மாத நிலவரப்படி, 6.41 கோடியாக இருந்த வாக்காளர்களில், 97.30 லட்சம் பேர் நீக்கப்பட்டனர். தற்போது, 5.43 கோடி பேர் மட்டுமே பட்டியலில் உள்ளனர். இதை தொடர்ந்து, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும், நீக்கவும், முகவரி மாற்றம் செய்யவும், கடந்த 10ம் தேதி வரை அவகாசம் வழங்கப்பட்டது.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி, பெயர் சேர்க்க 22.8 லட்சம் மனுக்கள்; பெயர் நீக்க 2 லட்சம்; திருத்தம் செய்ய 9.90 லட்சம் மனுக்கள் என, மொத்தம் 34.7 லட்சம் மனுக்கள் பெறப்பட்டு உள்ளன.

இறுதி வாக்காளர் பட்டியல்

அவற்றை பரிசீலித்து, இறுதி வாக்காளர் பட்டியலை, தலைமை தேர்தல் கமிஷன் இன்று வெளியிட்டது. மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரிகளான கலெக்டர்கள், இன்று பட்டியலை வெளியிட்டனர். அதன் விபரம் பின்வருமாறு:

* நாமக்கல் மாவட்டத்தில், 6 சட்டசபை தொகுதிகளில், ஆண் வாக்காளர்கள், 6,35,299, பெண் வாக்காளர்கள், 6,75,452, இதரர், 200, மொத்தம்: 13,10,951. நீக்கம் செய்யப்பட்டவர்கள், 1,43,321 பேர்.
* தூத்துக்குடி மாவட்டத்தில் இன்று இறுதி வாக்காளர் பட்டியலை கலெக்டர் இளம் பகவத் அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார். மொத்தம் 13,76,624 வாக்காளர்கள் சட்டசபை தேர்தலில் ஓட்டளிக்க தகுதி பெற்றுள்ளனர்.
* விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 7 சட்டசபை தொகுதிகளில் மொத்தம் 14,97,417 வாக்காளர்கள் உள்ளனர்.
* சிவகங்கையில் ஆண் வாக்காளர்கள் –5,44,035, பெண் வாக்காளர்கள்–5,66,526, மூன்றாம் பாலினத்தவர்கள்–38, மொத்த வாக்காளர்கள்–11,10,599.
* சேலத்தில் ஆண் வாக்காளர்கள் – 13,70,962, பெண் வாக்காளர்கள்–13,84,548, மூன்றாம் பாலினத்தவர்கள்–320, மொத்த வாக்காளர்கள்–27,55,830.
* திருச்சியில் ஆண் வாக்காளர்கள் – 10,31,354, பெண் வாக்காளர்கள்–10,94,642, மூன்றாம் பாலினத்தவர்கள்–307, மொத்த வாக்காளர்கள்–21,26,303.
* கடலூரில் ஆண் வாக்காளர்கள் – 9,91,527, பெண் வாக்காளர்கள்–10,23,979, மூன்றாம் பாலினத்தவர்கள்–293, மொத்த வாக்காளர்கள்–20,15,196.
* செங்கல்பட்டில் ஆண் வாக்காளர்கள் – 11,04,511, பெண் வாக்காளர்கள்–11,55,144, மூன்றாம் பாலினத்தவர்கள்–381, மொத்த வாக்காளர்கள்– 22,60,036.
* கன்னியாகுமரியில் ஆண் வாக்காளர்கள் – 7,51,016, பெண் வாக்காளர்கள்– 7,59,390, மூன்றாம் பாலினத்தவர்கள்–144, மொத்த வாக்காளர்கள்– 15,10,550.
* மயிலாடுதுறை மாவட்டத்தில் மொத்த வாக்காளர்கள் 7,29, 216, இதில் ஆண் வாக்காளர்கள் 3,60,493, பெண் வாக்காளர்கள் 3,68,676, மூன்றாம் பாலின வாக்காளர்கள் 47 பேர் இடம் பெற்றுள்ளனர்.
* கோவையில் ஆண் வாக்காளர்கள் – 13,00,889, பெண் வாக்காளர்கள்–13,95,396, மூன்றாம் பாலினத்தவர்கள்–528, மொத்த வாக்காளர்கள்– 26,96,813.

தொடர்ந்து மாவட்டம் வாரியான புள்ளி விவரங்கள் வெளியாகி வருகின்றன. மாநிலம் முழுதும் உள்ள இறுதி வாக்காளர் விபரங்களை, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட உள்ளார்.




தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 23.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 11-ம் தேதி

# அவசியமானது... ரஃபேல் போர் விமானம்



பிரான்ஸ் நாட்டிலிருந்து மேலும் 114 ரஃபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்வது என்கிற பாதுகாப்பு அமைச்சகத்தின் முடிவு அவசியமானது. 114 ரஃபேல் போர் விமானங்கள் உள்பட மொத்தம் ரூ 3.60 லட்சம் கோடிக்கான ராணுவத் தளவாடங்களை கொள்முதல் செய்யும் முடிவுக்கு பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் (டிஏசி) ஒப்புதல் அளித்திருக்கிறது. இந்த கொள்முதல் குறித்த ஒப்பந்தம் டஸால்ட் விமான நிறுவனத்துடன் விலை குறித்த முக்கியமான பேச்சுவார்த்தைக்குப் பிறகுதான் முறைப்படி கையொப்பமாகும்.

ஏற்கெனவே 36 ரஃபேல் போர் விமானங்கள் கொள்முதல் செய்யப்பட்டு இந்திய விமானப் படையின் பயன்பாட்டில் உள்ளன. தற்போதைய திட்டத்தின் கீழ், முதல்கட்டமாக பிரான்ஸின் டஸால்ட் நிறுவனம் 18 ரஃபேல் போர் விமானங்களை பிரான்ஸி லேயே தயாரித்து அனுப்பும். எஞ்சிய விமானங்கள் 50% உள்நாட்டு உதிரிபாகங்களுடன் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும். இதற்கான செலவு சுமார் ரூ.3 லட்சம் கோடி என்று கணக்கிடப்படுகிறது.

பொதுப் பயன்பாட்டுக்கும், ராணுவத்துக்கும் விமானங்கள் இந்தியாவுக்கு அத்தியாவசியத் தேவையாக இருக்கின்றன. குறிப்பாக, இந்திய விமானப் படையின் படைப்பிரிவுகள் (ஸ்குவாட்ரன்ஸ்) எண்ணிக்கை குறைந்து வருவது கவலைக்குரியதாக இருந்து வருகிறது. அந்த வகையில், 114 ரஃபேல் போர் விமானங்கள் கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்கி இருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

இப்போதைய கொள்முதல் திட்டத்தின்படி, உள்நாட்டில் 50 % பாகங்கள் தயாரிக்கப்பட இருப்பது மிக முக்கியமான அம்சம். விமானப் படையின் தேவைக்கானாலும், பொதுத் தேவைக்கானாலும் இந்தியாவிலேயே விமானங்கள் தயாரிக்கப்படுவது என்பது நமது தற்சார்புக்கும், வளர்ச்சிக்கும் அவசியமானது. இந்தியாவிலேயே விமானங்களைத் தயாரிப்பதற்காக ரூ.12,511 கோடியை ஒதுக்க அரசு ஏற்கெனவே திட்டமிட்டுள்ளது. அதில் பெரும் பகுதி கட்டமைப்பு, சோதனைகள், ஒப்புதலுக்காக (சர்டிபிகேஷன்) செலவிடப்படும்.

"ஒப்புதல்" என்பது தொழில்நுட்ப ரீதியிலான சவால் மட்டுமல்ல, மிகப் பெரிய செலவை உடையது. எந்த ஒரு விமானம் தயாரிக்கப்பட்டாலும் ஐரோப்பிய யூனியன் விமான சேவை பாதுகாப்பு அமைப்பு அல்லது அமெரிக்க பெடரல் விமான சேவை நிர்வாகம் இரண்டில் ஒன்றின் ஒப்புதலை (சர்டிபிகேஷன்) பெற்றாக வேண்டும். அந்த ஒப்புதல் இல்லாத விமானங்களை எந்த ஒரு விமான சேவை நிறுவனத்திலும் இயங்க முடியாது. சீனா, சி – 919 என்கிற பயணிகள் சேவை விமானத்தை உற்பத்தி செய்து 2023–இல் வர்த்தக ரீதியாக சந்தைப்படுத்தியது. ஆனால், இதுவரையிலும் ஒப்புதல் வழங்கப்படாததால் எந்த ஒரு நாடும் அதை வாங்கவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விமானங்கள் தயாரிப்பு என்பது மிகப் பெரிய சவால். அதற்கான பல்வேறு பாகங்களை உற்பத்தி செய்யும் பரவலான தொழில்நுட்பச் சூழல் இருந்தால் மட்டுமே சாத்தியம். பல்வேறு பாகங்களை உற்பத்தி செய்து வழங்க ஆயிரக்கணக்கான உற்பத்தியாளர்கள் தயாரிப்பில் இணைய வேண்டும். தரையிறங்குவதற்கான லேண்டிங் கியர், விமானத்தின் "புரோப்பல்லர்" எனப்படும் விசிறி, ராடார் கருவிகள், தொலைத்தொடர்பு சாதனங்கள் என்று விமானத்தின் ஒவ்வொரு பகுதியும் நுணுக்கமான தொழில்நுட்பம் சார்ந்தவை.

அடுத்தாற்போல, விமானத்தின் மிக முக்கியப் பகுதியான என்ஜினை உள்நாட்டில் உற்பத்தி செய்துவிட முடியாது. சீனா உற்பத்தி செய்த சி 919–இல் உள்ள என்ஜினேகூட இறக்குமதி செய்யப்பட்டதுதான். அதனால், உள்நாட்டில் 50% விமான பாகங்களை உற்பத்தி செய்வது என்பது உடனடியாக சாத்தியப்படுவது கடினம்.

விமானம் உற்பத்தி செய்வது ஒரு புறம் இருந்தாலும், டஸால்ட் ரஃபேல் போர் விமானம் கொள்முதல் செய்வதுகூட எளிதல்ல. ரஃபேல் போர் விமானத்தின் உதிரிபாகங்களை வழங்கும் எல்எம்டி ஏரோஸ்பேஸ் நிறுவனம் ஓர் அமெரிக்க நிறுவனத்தால் வாங்கப்பட்டிருக்கிறது. அதனால், ரஃபேல் விற்பனை அமெரிக்காவின் சர்வதேச ஆயுத விற்பனை விதிமுறைகளுக்குள் வரும். எல்எம்டி பாகங்களுடன் தயாரிக்கப்படும் ரஃபேல் போர் விமானங்களை இந்தியா வாங்குவதற்கு அமெரிக்காவின் அனுமதி தேவை.

அடுத்த 10 ஆண்டுகளில் பயணிகள் விமான சேவைக்காக மட்டுமே 2,000–க்கும் அதிகமான விமானங்கள் தேவை. அவற்றை இறக்குமதி செய்வதைத் தவிர வழியில்லை. அதேபோல, நமது விமானப் படைக்கும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமாக இருக்கும் ரஃபேல் போர் விமானங்கள் தவிர்க்க முடியாதவை.

பிரேஸிலின் எம்பிரேயர் நிறுவனத்துடன் இந்தியாவில் விமான உற்பத்தியை மேற்கொள்ள அதானி குழுமம் மேற்கொண்டிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் வரவேற்புக்குரிய நல்ல முடிவு.

விமானத் தயாரிப்பு என்பது போர் விமானம் தயாரிப்பதற்கும், உள்நாட்டு விமானங்கள் தயாரிப்பதற்கும் மட்டுமல்லாமல், ஆயிரக்கணக்கான உதிரிபாகங்கள் தயாரிப்பாளர்களையும் உருவாக்கும். அதன் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். விமானத் தயாரிப்பு முயற்சியை இப்போது தொடங்கினால்தான் அடுத்த 10 ஆண்டுகளிலாவது சீனாவைப்போல சொந்தமாக விமானம் தயாரிக்கும் நிலைக்கு இந்தியா உயரும்.



பழனி முருகன் கோயில் சார்பில் 35 மூத்த தம்பதியர்களுக்கு சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கோயில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, கவுன்சிலர்கள் சுரேஷ், இந்திரா திருநாவுக்கரசு, தீனதயாளன், நகரத் துணைச் செயலாளர் சக்திவேல், ராஜசேகர், அழகர்சாமி, பங்கேற்றனர்.



பழனி மாரியம்மன் திருவிழாவை முன்னிட்டு, செங்குந்தர் மகாஜன சங்கம் சார்பில், பால்குட ஊர்வலம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் சண்முகவேலு, மாவட்டச் செயலாளர் பரமசிவம், கே மணிகண்டன், ஆர் முருகானந்தம், செந்தில்குமார், பாலாஜி, மௌனகுருசாமி, கீர்த்தனா, குமரேசன், பாலசுப்பிரமணி, ராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.





பழனி அருகே முத்து நாயக்கன்பட்டியில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ரேக்ளா மாட்டு வண்டி பந்தயம் நடைபெற்றது. இதை அமைச்சர் அர. சக்கரபாணி தொடங்கி வைத்தார். அருகினில் பொதுக்குழு உறுப்பினர் மகுடீஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்

# புரட்சித்தலைவி அம்மா பிறந்தநாள் விழா!

திருப்பூர், பிப். 23–

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மக்களால் நான் மக்களுக்காகவே நான் என வாழ்ந்து மறைந்த ஜெ ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு 28 வது வார்டு கவுன்சிலர் சேகர் ஏற்பாட்டில் மரக்கடை பஸ் ஸ்டாப்பில் இருந்து மாஸ்கோ நகர் வரை 500க்கும் மேற்பட்ட பெண்கள் பால்குடம் எடுத்து ஊர்வலமாக வருகை தந்து அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தால் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு 2000 பேருக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் விழா நடைபெற்றது விழாவிற்கு வருகை புரிந்த சட்டமன்ற உறுப்பினர் எம்எஸ்எம் ஆனந்தன் அவர்களை குதிரை வண்டியில் அழைத்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

மேலும் 2000 பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கே என் விஜயகுமார். மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி. எதிர்க்கட்சி கொரடா கண்ணப்பன்.29 வது வார்டு கவுன்சிலர் சின்னச்சாமி.புதிய பேருந்து நிலைய பகுதி செயலாளர் கனகராஜ் உள்ளிட்ட அதிமுக கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர் கேரளா கலைக்குழுவினர் ஊர்வல மேளதாள நிகழ்ச்சியினை பொதுமக்கள் கண்டு ரசித்தனர்...

# பாரதிய ஜனதா கட்சி சார்பில் தெருமுனை கூட்டம்!



திருப்பூர், பிப். 23–

பாரதிய ஜனதா கட்சி திருப்பூர் வடக்கு மாவட்டம் மாவட்ட தலைவர் சீனிவாசன் அவருடைய வழிகாட்டுதலின்படி மண்டல தலைவர்.உதயகுமார் தலைமையில் மண்டல பொதுச் செயலாளர் . கார்த்திகேயன் ஏற்பாட்டில் பாண்டியன் நகர் பஸ் ஸ்டாப் அருகில் தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக திருப்பூர் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் பூலுவபட்டி பாலு , அறிவுசார் பிரிவு மாநில செயலாளர் துரைப்பாண்டி , மாவட்ட பொதுச் செயலாளர் கலாமணி ,மாவட்ட செயலாளர் ஜீவா உமா கலந்து கொண்டு.

நிகழ்ச்சியை.சிறப்பித்தனர்.அமமுக மாவட்ட துணை செயலாளர் வீர கந்தசாமி ,தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாவட்ட தலைவர் காசிராஜன், இந்திய ஜனநாயக கட்சி அலெக்ஸ் பாண்டியன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 2வது வார்டு செயலாளர் செல்வராஜ் , பாரதிய ஜனதா கட்சி நெருப்பெரிச்சல் மண்டல் நிர்வாகிகளும் பொது மக்களும் பங்கேற்றனர் ...

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவமனையில் அனுமதி!



சென்னை, பிப். 23–

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. கடந்த இரண்டு நாட்களாக உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வருகிறார். அவருக்கு தொடர் காய்ச்சல் நீடித்து வந்ததால், உடனடியாக அவரை சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. உடல் நலம் தேறியவுடன் ஓரிரு நாட்களில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வீடு திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




உலகத் தாய்மொழி தித்தை முன்னிட்டு மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை, நக்கீரர் தமிழ்ச்சங்கம் இணைந்து நடத்திய விழாவில் நிலா சேவை மைய அறக்கட்டளை, நிலா இலக்கிய மன்றம் தலைவர் கவிக்குயில் இரா.கணேசன் அவர்களுக்கு அறக்கட்டளை தலைவர் குருசாமி அவர்கள் பதக்கமும், நற்சான்றும் வழங்கி பாராட்டினார். அருகில் மீடியாபாஸ்கர், பள்ளி தலைமை ஆசிரியர் நாராயணன், வழக்கறிஞர் அர்ச்சனாதேவி ஆகியோர் உள்ளனர்.




# 24-வது உலகத் தமிழாய்வு மாநாட்டில், தமிழ் ஆய்வுச் செம்மல் விருது!



திருப்பூர், பிப். 23–

திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த திரைப்பட இயக்குநர் புகழ் தமிழாய்வுச் செம்மல் விருது பெற்றார்.உலகத் தாய் மொழி தினத்தை முன்னிட்டு திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம், ஔவைக் கோட்டம் சார்பில் 24வது உலகத் தமிழாய்வு மாநாடு நடைபெற்றது.மாநாட்டில் திரைப்பட இயக்குநர் புகழ் தமிழாய்வு செம்மல் விருது பெற்றார். சட்டமன்ற உறுப்பினர்கள், யாழ்ப்பாணம் மேனாள் துணைத்தூதர் அ.நடராஜன், சமூக சேவகர் தம்பி ராஜா (எ ) ஏ.பி.முகமது, உள்ளிட்ட பலருக்கும் மாநாட்டு இயக்குநர் கலைவேந்தன் மற்றும் ஔவைக் கோட்ட புரவலர்கள் விருதுகள் வழங்கி சிறப்பித்தார்கள்.உலகத் தாய்மொழி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஆய்வுக்கட்டுரை கருத்தரங்கில் பங்கேற்க பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.



# வீட்டில் பணப் பிரச்சனைகள் இருக்கா..? இந்த 5 செடிகள் வைத்தால்.. மகிழ்ச்சியும் செல்வமும் பெருகும்..!



பலர் வீட்டில் செடிகளை வளர்க்கிறார்கள். வீட்டை அழகாகக் காட்டுவதற்காகவே இவற்றை வைத்திருப்பதாக அனைவரும் நினைக்கிறார்கள். ஆனால் பலருக்குத் தெரியாதது என்னவென்றால், இந்த செடிகளை வீட்டில் வைத்திருப்பது மங்களகரமானது. அவை வீட்டில் அமைதியின்மையை நீக்கி அமைதியை நிலைநாட்டுவதில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவை பணம் ஈட்டுவதற்கும் உகந்தவை. எனவே வீட்டில் எந்தெந்த செடிகள் செல்வத்தை அதிகரிக்கின்றன என்பதை இப்போது கண்டுபிடிப்போம்.

**துளசி செடி:** துளசி இந்து மதத்தில் மிகவும் புனிதமான தாவரமாகக் கருதப்படுகிறது. வீட்டின் முற்றத்தில், பால்கனியில் அல்லது ஜன்னல் அருகே அதை வைத்திருப்பது மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. அதுமட்டுமின்றி, இது ஆரோக்கியத்திற்கும் நன்மை பயக்கும். தினமும் காலையிலும் மாலையிலும் துளசி செடியின் அருகே வழிபட்டு விளக்கு ஏற்றுவது வீட்டில் அமைதியையும் செல்வத்தையும் அதிகரிக்கும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

**பணச்செடி:** பணச்செடி செழிப்பு மற்றும் நிதி வளர்ச்சியின் அடையாளமாகக் கருதப்படுகிறது. வாஸ்துவின் படி, அதை வீட்டிற்குள், குறிப்பாக தென்கிழக்கு திசையில் வைத்திருப்பது மிகவும் நல்லது. இந்த செடி செல்வத்தையும் செழிப்பையும் ஈர்க்கிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், அதை வளர்க்க அதிக முயற்சி தேவையில்லை.

**பாம்பு செடி:** இவை பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சிகரமானவை. மேலும், இதன் நீண்ட, நேரான இலைகள் வீட்டிற்கு நிறைய அழகைக் கொண்டுவருகின்றன. இந்த செடி வீட்டில் எதிர்மறை சக்தியைக் குறைக்கிறது. வீட்டில் நேர்மறை சூழ்நிலையையும் அதிகரிக்கிறது.

**ஸ்பைடர் பிளாண்ட் :** இந்த செடி வீட்டின் அழகையும் அதிகரிக்கிறது. வீட்டின் பால்கனியில் தொங்கும் தொட்டிகளில் இவற்றை வளர்ப்பதன் மூலம், வீட்டிற்கு மிகவும் அழகான தோற்றத்தை அளிக்கிறது. இந்த செடி வீட்டில் நேர்மறையான சூழ்நிலையை உருவாக்குகிறது. வாஸ்து படி, இந்த செடி வீட்டில் நேர்மறை ஆற்றலை அதிகரிக்கிறது. இது மன அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. இது செல்வத்தை உருவாக்கவும் உதவுகிறது.

வீட்டில் இது ஒரு அழகான பூக்கும் செடி, இது வீட்டின் அழகை மேம்படுத்துவது மட்டுமல்லாமல் நேர்மறை ஆற்றலின் அடையாளமாகவும் கருதப்படுகிறது. இதன் சிறிய, வண்ணமயமான பூக்கள் வீட்டில் ஒரு இனிமையான சூழ்நிலையை உருவாக்குகின்றன. வாஸ்து படி, இதை வீட்டில் வைத்திருப்பது அமைதியையும் மகிழ்ச்சியையும் அதிகரிக்கிறது. இது நிதி சிக்கல்களைக் குறைக்கவும் உதவுகிறது.

# பழனி முருகன் கோவில் சார்பில் 35 மூத்த தம்பதிகளுக்கு சிறப்பு செய்யும் நிகழ்ச்சி!

பழனி, பிப். 23–

பழனி முருகன் கோவில் நிர்வாகம் சார்பில் சட்ட சபையில் அறிவிக்கப்பட்டபடி, மூத்த தம்பதியர்களுக்கு சிறப்பு செய்தல் நிகழ்ச்சி நேற்று பழனி பட்டத்து விநாயகர் கோவிலில் நடைபெற்றது. இதில் தேர்வு செய்யப்பட்ட 35 மூத்த தம்பதியர்களுக்கு புதிய பட்டாடைகள் தாம்பூலம் பிரசாதம் வழங்கப்பட்டது. பின்பு மூத்த தம்பதியர் மாலை மாற்றிக் கொண்டனர். இதற்கான நிகழ்ச்சியில் கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, துணை ஆணையர் வெங்கடேசன், மேலாளர் உமா மகேஸ்வரி, கவுன்சிலர்கள் கே சுரேஷ், தீனதயாளன், இந்திரா திருநாவுக்கரசு, நகரத் துணைச் செயலாளர் ஏ கே எம் சக்திவேல், ராஜசேகர் ஆகியோர் பங்கேற்றனர்.

# திருப்பூர் மதிமுக கூட்டம்!



திருப்பூர், பிப். 23–

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக திருப்பூர் மாநகர் மாவட்ட கூட்டம் காந்தி நகரில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது கூட்டத்திற்கு மாவட்ட அவை தலைவர் நேமிநாதன் தலைமை தாங்கினார் மாவட்ட பொருளாளர் சுப்பிரமணி வரவேற்றார் மாநகர் மாவட்ட செயலாளர் மாமன்ற உறுப்பினர் அரிமா ஆர் நாகராஜ் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார் இதில் மதிமுக ஒழுங்கு நடவடிக்கை குழு ஆடிட்டர் அன்பழகன் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கந்தசாமி மாவட்ட துணை செயலாளர்கள் குமார் வழக்கறிஞர் தமயந்தி தலைமை செயற்குழு உறுப்பினர் சக்திவேல் உள்ளிட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பங்கேற்று அனைவரும் ஒருமித்த கருத்தாக திருப்பூர் மாவட்டத்தில் வருகின்ற நடைபெறுகின்ற சட்டமன்றத் தேர்தலில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு தொகுதி வெற்றி தர வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றினார்கள்.




## வயிற்று வலியை புறக்கணிக்காதீர்கள்; அது ஆபத்தான புற்றுநோய் அறிகுறியாக இருக்கலாம்.. கவனமாக இருங்க..!



புற்றுநோய் என்பது உடலின் உட்புற மற்றும் வெளிப்புற பாகங்களை சேதப்படுத்தும் ஒரு ஆபத்தான நோயாகும். புற்றுநோய் உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவக்கூடும். அமெரிக்க புற்றுநோய் சங்கத்தின் 2026 அறிக்கையின்படி, 1990 முதல் ஐம்பது வயதுக்குட்பட்ட அமெரிக்கர்களிடையே புற்றுநோய் இறப்புகள் 44 சதவீதம் குறைந்துள்ளன. சிகிச்சைகள் மற்றும் புகைபிடிப்பதை விட்டுவிடுவதால் இந்த வெற்றி சாத்தியமானது. இருப்பினும், இந்த உறுதியளிக்கும் ஆராய்ச்சியுடன், ஒரு கவலையான ஆராய்ச்சி வெளிவந்துள்ளது. பெருங்குடல் புற்றுநோய் அல்லது குடல் புற்றுநோய் வழக்குகள் அதிகரித்து வருகின்றன.

பெருங்குடல் புற்றுநோய் அல்லது குடல் புற்றுநோய் வழக்குகள் அதிகரித்து வருகின்றன. நுரையீரல், மார்பகம் மற்றும் மூளை புற்றுநோய்களால் ஏற்படும் இறப்பு விகிதம் குறைந்திருந்தாலும், இளம் வயதிலேயே பெருங்குடல் புற்றுநோயின் விகிதம் வேகமாக அதிகரித்து வருகிறது. ஐம்பது வயதுக்குட்பட்ட ஆண்கள் இந்த புற்றுநோய்க்கு பலியாகி வருவது உண்மையிலேயே கவலையளிக்கிறது. எனவே, மீண்டும் மீண்டும் வயிற்று வலி ஏற்படும் அறிகுறிகளைப் புறக்கணிக்க வேண்டாம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள். அவ்வப்போது வயிற்று வலி ஏற்படுவது இயல்பானது. ஆனால் வலி தொடர்ந்தால், குறிப்பாக அதே பகுதியில் ஏற்பட்டால், அதை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

**திடீர் எடை இழப்பு:**

திடீர் எடை இழப்பு ஒரு எச்சரிக்கை அறிகுறியாக இருக்கலாம். நிறைய சாப்பிட்ட பிறகும் நீங்கள் எடை இழக்கிறீர்கள் என்றால், இது கவலைக்குரியது. ஏனெனில் புற்றுநோய் செல்கள் உடலின் ஆற்றலை அதிகம் பயன்படுத்துகின்றன, இது பலவீனம் மற்றும் சோர்வுக்கு வழிவகுக்கும். உடைகள் தளர்வாகி, எடை இழப்புக்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை என்றால், உடல்நலப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

**நிலையான சோர்வு:**

நிலையான சோர்வும் ஒரு முக்கிய அறிகுறியாகும். பரபரப்பான வாழ்க்கை முறை சோர்வுக்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம். ஆனால் ஓய்வுக்குப் பிறகும் பலவீனம் பிரச்சினை தொடர்ந்தால், அதை புறக்கணிக்கக்கூடாது. பெருங்குடல் புற்றுநோய் உட்புற ரத்தப்போக்கை ஏற்படுத்தும், இது ரத்த இழப்பு மற்றும் நிலையான சோர்வுக்கு வழிவகுக்கிறது.

**மலப் பிரச்சினைகள்:**

மலத்தில் இரத்தம் ஒரு கடுமையான உடல்நலப் பிரச்சினையின் அறிகுறியாக இருக்கலாம். பலர் அதை புறக்கணிக்கிறார்கள், பெரும்பாலும் அதை மூல நோய் என்று தவறாக நினைக்கிறார்கள். ஆனால் மலத்தில் இரத்தத்தைக் கண்டால், உடனடியாக ஒரு மருத்துவரை அணுகவும். சில நேரங்களில், சிவப்பு ரத்தம் லேசான பிரச்சனையின் அறிகுறியாக இருக்கலாம், ஆனால் இரத்தம் அடர் நிறத்தில் இருந்தால், அது ஒரு கடுமையான பிரச்சனையின் அறிகுறியாக இருக்கலாம்.

**குடல் சுகாதார பிரச்சினைகள்:**

குடலில் ஏற்படும் மாற்றங்களுக்கு கவனம் செலுத்துவதும் முக்கியம். நாள்பட்ட மலச்சிக்கல் அல்லது திடீர் வயிற்றுப்போக்கை புறக்கணிக்காதீர்கள். இந்த மாற்றங்கள் சில வாரங்களுக்கு மேல் நீடித்தால், பரிசோதனை செய்து கொள்வது முக்கியம். நோய் சரியான நேரத்தில் கண்டறியப்பட்டால், சிகிச்சையானது ஆபத்தை பெருமளவில் குறைக்கும்.

# வார தொடக்க முதல்நாளில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.1,440 அதிகரிப்பு!




சென்னை, பிப். 23–

சென்னையில் இன்று 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 1,440 ரூபாய் அதிகரித்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 880 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு 180 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 14 ஆயிரத்து 860 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு 10 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் வெள்ளி ரூ.300க்கும், கிலோவுக்கு 10 ஆயிரம் ரூபாய் அதிகரித்து ஒரு கிலோ வெள்ளி ரூ.3 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# அறிவிப்பு

எமது கட்சிக்காரர் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், மேலசொக்கநாதபுரம், முல்லை நகர், கிருஷ்ணா நகர், 6வது தெரு கதவு எண்.132 முகவரியில் வசிக்கும் மோகன்தாஸ் அவர்களின் மனைவி M.காஞ்சனா என்பவரின் பெரியகுளம் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் ஆவண எண்.700/2000ம் நம்பர் ரிஜிஸ்டர் கிரைய அசல் ஆவணத்தை 12.01.2026ம் தேதியில் தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, தென்கரை, மூன்றாந்தல் தேவர் சிலை அருகில் ஜெராக்ஸ் எடுக்கச் சென்றபோது தவறவிட்டுவிட்டார். கிடைக்கப் பெற்றவர்கள் உடனே கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:–

**P.சதீஸ்குமார்.B.A.B.L.,**
(வழக்கறிஞர்)
4, நகராட்சி வணிக வளாகம், தென்கரை, பெரியகுளம்,
மொபைல் எண்: 9843175966.

# திருப்பதி பக்தர்களுக்கு ஜாக்பாட்! இனி அலைச்சல் கிடையாது.. பயணத்தில் புதிய மாற்றம்!

திருமலை, பிப். 23–

திருமலை ஸ்ரீவாரி பக்தர்களுக்கு ஹாப்பி நியூஸ். திருமலைக்கு வரும் பக்தர்கள் ஸ்ரீவாரி தரிசனம் செய்த பிறகு மற்ற ஆன்மீக தலங்களுக்குச் செல்கிறார்கள். திருப்பதியில் இருந்து அத்தகைய இடங்களுக்கு நேரடியாகச் செல்ல விமான சேவைகள் கிடைக்க புதிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கல்லா ஜெயதேவ் உடன் ராம்மோகன் நாயுடு ஸ்ரீகாளஹஸ்திக்கு வருகை தந்திருந்தார். கோயில் அதிகாரிகள் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர். இந்த நிகழ்வில், ராம்மோகன் நாயுடு கோயிலில் சிறப்பு பூஜைகள் செய்தார். பின்னர், திருப்பதியில் இருந்து நாட்டின் பல்வேறு ஆன்மீக தலங்களுக்கு நேரடி விமான சேவைகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவித்து இருந்தார். இங்கிருந்து வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாகவும், இதன் காரணமாக, ரேணிகுண்டாவிற்கு வெளிநாட்டு



விமான சேவைகளை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியிருந்தார். மேலும் ரேணிகுண்டாவிலிருந்து வளைகுடா நாடுகளுக்கு விமான சேவைகளை கிடைக்கச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். சமீபத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த பட்ஜெட்டில் விமானப் போக்குவரத்துத் துறைக்கு அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**திருமலை திருப்பதி பக்தர்களுக்கு நிவாரணம்:**

திருமலைக்குச் சென்ற பிறகு, பக்தர்கள் மற்ற ஆன்மீகத் தலங்களுக்கும் செல்கின்றனர். பிரபலமான இடங்களுக்கு நேரடி விமான சேவைகள் மூலம், குறைந்த நேரத்தில் அந்த இடங்களை அடைய முடியும். இது பயண நேரத்தைக் குறைக்க உதவும்.

**மே மாதம் சாமி தரிசனம்**

இதனிடையே திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வரும் மே மாதம் சாமி தரிசனம் செய்வதற்கான ஆன்லைன் தரிசன டிக்கெட் புக்கிங் கடந்த பிப்ரவரி 18 ஆம் தேதி காலை துவங்கப்பட்டது. அதேபோல் இன்று காலை 10 மணிக்கு அங்கப் பிரதட்சணம் டோக்கன்கள் வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீவாணி டிரஸ்ட் தரிசன டிக்கெட்கள் இன்று காலை 11 மணிக்கும், அன்றைய தினம் 3 மணிக்கு மூத்த குடி மக்கள், மாற்று திறனாளி பக்தர்கள் ஆகியோருக்கான இலவச சிறப்பு தரிசன டிக்கெட்கள் வெளியிடப்படும். அதேபோல் நாளை காலை 10 மணிக்கு ரூ.300 சிறப்பு தரிசன டிக்கெட்கள் வெளியிடப்படும்.

அந்த வகையில் தரிசன டிக்கெட்கள் அனைத்தையும் ttdevasthanams.ap.gov.in என்ற திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தின் வழியாக பக்தர்கள் முன்பதிவு செய்துக் கொள்ளவும்.

# திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றணும்: கந்த சஷ்டி கவசம் பாடி அண்ணாமலை வழிபாடு!

சென்னை, பிப். 23–

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றவேண்டும் என்ற உறுதியை ஏற்று, வீட்டில் கந்த சஷ்டி கவசம் பாடி தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை வழிபாடு நடத்தி உள்ளார்.

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டுமென்ற சங்கல்பத்தை எடுத்துக் கொண்டு, நாம் அனைவரும் இன்று (23–02–2026) நமது இல்லங்களிலும், கோவில்களிலும், தெருக்களிலும் “கந்த சஷ்டி கவசம்” பாட வேண்டும் என தமிழக பாஜ மற்றும் ஹிந்து அமைப்பினர் வலியுறுத்தி இருந்தனர்.

அந்த வகையில், வீட்டில் கந்த சஷ்டி கவசம் பாடி தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை வழிபாடு நடத்தி இருக்கிறார். இது தொடர்பாக வீடியோவை சமூக வலைதளத்தில் பகிர்ந்து அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கை:



சக்திவேல் ஏந்திய குமரனுக்கு உகந்த திதியான சஷ்டியும், கந்தனுக்கு உகந்த நட்சத்திரமான கார்த்திகையும் இணைந்துள்ள இன்றைய நாளில், திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றவேண்டும் என்ற உறுதியை ஏற்று “கந்த சஷ்டி கவசம்” பாடி முருகனை போற்றுவோம்.

அனைவரின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் கந்த சஷ்டி கவசம் பாடி, முருகப்பெருமானின் பேரருள் உலக மக்கள் அனைவருக்கும் கிடைத்திட மனதார பிரார்த்திப்போம். இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

# ஓ.பி.எஸ்., தி.மு.க.வுக்கு சென்றால் நாங்கள் த.வெ.க.வுக்கு செல்வோம்- ஆதரவாளர்கள் ‘திடீர்’ போர்க்கொடி!

ஊட்டி, பிப். 23–

ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவு எம்.எல்.ஏ. அய்யப்பன் ஆகியோர் தி.மு.க.வுக்கு ஆதரவான நிலைப்பாட்டுடன் பேசி வருகின்றனர்.

அத்துடன் ஓ.பன்னீர்செல்வம் சில தினங்களுக்கு முன்பு சட்டசபை வளாகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்தார். அந்த சந்திப்பு முடிந்து வெளியில் வந்த அவர், தி.மு.க அரசையும், முதலமைச்சரையும் பாராட்டி பேசினார். இதனால் அவர் தி.மு.க. கூட்டணிக்கு நெருங்கி வருவதாக பார்க்கப்படுகிறது.

ஓ.பி.எஸ்.சின் இந்த முடிவுக்கு அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். நீலகிரி மாவட்டம் கூடலூரில் மாவட்ட செயலாளர் பாரதியார் தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் பந்தலூர், கூடலூர் பகுதியை சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்றனர். அப்போது ஓ.பன்னீர்செல்வம் தி.மு.க.வுக்கு சென்றால் அவருடன் நிர்வாகிகள் நாங்கள் யாரும் செல்லமாட்டோம். ஓ.பி.எஸ்., தி.மு.க. ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தால் நாங்கள் அனைவரும் ஓ.பன்னீர்செல்வம் அணியை விட்டு வெளியேறுவோம் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.



இதுதொடர்பாக நீலகிரியை சேர்ந்த ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் கூறியதாவது:–

சென்னையில் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அப்போது எங்களிடம் ஒரு படிவம் வழங்கப்பட்டு, அதில் தி.மு.க.விற்கு செல்வதா? அல்லது வேறு கட்சிக்கு செல்வதா? என 2 விருப்பங்கள் கேட்கப்பட்டன.

அப்போதே நாங்கள் தி.மு.க. என்ற வார்த்தையை பயன்படுத்தியது தவறு என்று குறிப்பிட்டோம். மேலும் 88 மாவட்ட செயலாளர்களில் 11 பேர் மட்டுமே தி.மு.க.வுக்கு செல்ல விருப்பம் தெரிவித்தனர். ஒருங்கிணைந்த அ.தி.மு.க.வாக வருகிற சட்டசபை தேர்தலை சந்திக்க வேண்டும். இல்லையென்றால் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்களாக இருந்த நாங்கள் விஜயின் த.வெ.கவுக்கு செல்வதை தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என ஓபிஎஸ் கூறியிருந்தார், இந்த நிலையில் தை முடிந்து மாசி தொடங்கிவிட்டது. ஆனாலும் அவரால் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்காமல் குழம்பியபடியே இருப்பது அவரது ஆதரவாளர்களிடையே சோர்வை ஏற்படுத்தியுள்ளது.

# 73 ஆண்டு கால வரலாற்றில் மிகவும் குறைவு!

சென்னை, பிப். 23–

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1952–ம் ஆண்டு முதல் ஜனநாயக முறைப்படி சட்டசபை தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. இதில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களே அந்தந்த



மாநில சட்டசபைகளில் மக்களுக்காக குரல் கொடுக்க முடியும்.

சட்டசபை என்பது சட்டங்கள் இயற்கும் இடமாகும். மேலும், சட்டங்களை திருத்த பயன்படுவதுடன் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் இடமாகவும் இருந்து வருகிறது. அதனால், ஒவ்வொரு ஆண்டும் சட்டசபை கூடும் நாட்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. அந்த வகையில், ஆண்டின் தொடக்கமாக முதல் கூட்டத்தில் கவர்னர் உரை நிகழ்த்துவது மரபாக இருந்து வருகிறது. அதன்பிறகு, பட்ஜெட் கூட்டமும், தொடர்ந்து துறை வாரியாக மானியக் கோரிக்கை விவாதமும் நடைபெறுகிறது.

மழைக்காலத்திற்கு முன்பாக, மழைக்கால கூட்ட தொடரும் நடக்கிறது. கடந்த 2021–ம் ஆண்டு சட்டசபை தேர்தலுக்கு திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், ஆண்டுக்கு 100 நாட்களுக்கு குறையாமல் சட்டசபை கூட்டம் நடத்தப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், 2021–ம் ஆண்டு மே முதல் 2026–ம் ஆண்டு பிப்ரவரிவரை 5 ஆண்டுகளில் 161 நாட்கள் மட்டுமே சட்டசபை கூட்டம் நடைபெற்றுள்ளது.

இதுவரை, 73 ஆண்டு கால சட்டசபை வரலாற்றில் குறைந்த நாட்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது இந்த முறைதான். இதற்கு முன்பு1989–1991–ம் ஆண்டு காலத்தில் 104 நாட்களே சட்டசபை கூட்டம் நடைபெற்றாலும், அப்போதைய ஆட்சி காலம் 3 ஆண்டுகளுக்கும் குறைவுதான். இதுவரை நடைபெற்ற 16 சட்டசபை காலத்தில் கூட்டம் நடைபெற்ற நாட்கள் விவரம் வருமாறு:–

| ஆண்டு | கூடிய நாட்கள்:– |
| --- | --- |
| 1952–1957 | 314 |
| 1957–1961 | 305 |
| 1962–1967 | 252 |
| 1967–1971 | 199 |
| 1971–1976 | 326 |
| 1977–1980 | 179 |
| 1980–1984 | 304 |
| 1985–1988 | 178 |
| 1989–1991 | 104 |
| 1991–1996 | 224 |
| 1996–2001 | 264 |
| 2001–2006 | 182 |
| 2006–2011 | 226 |
| 2011–2016 | 191 |
| 2016–2021 | 162 |
| 2021–2026 | 161 |




**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# வேலை வாய்ப்பு

## எய்ம்ஸ் 3000+ காலியிடங்கள்





நிறுவனத்தின் பெயர்: அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம்
அறிவிப்பு எண்: 17/2026 தேதி: 24.02.2026
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 3000+ நர்சிங் அதிகாரி ஆட்சேர்ப்பு பொது தகுதித் தேர்வு (NORCET) 10 பதவிகள்
பணியிடப்படும் இடம்: இந்தியா முழுவதும்
தொடக்க தேதி: 24.02.2026
கடைசி தேதி: 16.03.2026 மாலை 05.00 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: www.aiimsexams.ac.in


# திருப்பூரில் வங்க தேசத்தினர் 6 பேர் கைது: தமிழகம் முழுவதும் கண்காணிப்பு தீவிரம்!

திருப்பூர், பிப். 23–

பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாகவும், பாதுகாப்பு படையினரை அச்சுறுத்தும் வகையிலும் டெல்லியில் சுவரொட்டி ஒட்டப்பட்டது. இதில் தொடர்புடையவர்களுக்கு ஆதரவாக, திருப்பூரில் முறைகேடாக தங்கியிக்கும் வங்க தேசத்தினர் சிலர் செயல்பட்டதாகக் கூறி டெல்லி போலீஸார் அம்மாபாளையம், பல்லடம், ஊத்துக்குளியைச் சேர்ந்த 6 பேரை கைது செய்து, டெல்லிக்கு அழைத்துச் சென்றனர். திருப்பூரில் வங்க தேசத்தினர் 6 பேர் கைதான நிலையில், பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக வேறு யாரேனும் உள்ளனரா என்பது தொடர்பாக தமிழகம் முழுவதும் போலீஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர்.



## சினிமா துளிகள்..!

# தயாரிப்பாளர் சங்கத் தேர்தல்; 527 வாக்குகள் வித்தியாசத்தில் தமிழ்குமரன் வெற்றி!



தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்திற்கான 2026 முதல் 2029ம் ஆண்டுக்கான நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான சங்க தேர்தல் அண்ணா நகரில் உள்ள தனியார் கல்லூரியில் (22–02–26) நடைபெற்றது.

இத்தேர்தலில், ஜி.எம்.தமிழ்குமரன் தலைமையிலான தயாரிப்பாளர்களின் நலன் காக்கும் அணியில் துணைத்தலைவர்கள் பதவிக்கு ஆர்.கே.சுரேஷ் மற்றும் எஸ்.கமலக்கண்ணனும், செயலாளர்கள் பதவிக்கு ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் கமீலா நாசரும், பொருளாளர் பதவிக்கு என்.சுபாஷ் சந்திரபோஸும், இணைச்செயலாளர் பதவிக்கு சுஜாதா விஜயக்குமாரும் போட்டியிட்டனர்.

மூத்த தயாரிப்பாளர்களான அழகன் தமிழ்மணி, சித்ரா லட்சுமணன், எச்.முரளி, எம்.கபார், ஆர்.மாதேஷ் ஆகியோருடன் சேர்ந்து சாலை சகாதேவன், பைஜா டாம், எஸ்.ஜோதி, வி.பழனிவேல், கே.செந்தாமரை கண்ணன், நீல்கிரிஸ் ஏ.முருகன், ஜி.எம்.டேவிட்ராஜ், டி.என்.தாய்சரவணன், கே.முருகன், வி.ஞானவேல், பிரவின்காந்த், வி.என்.ரஞ்சித் குமார், எஸ்.ஜெயசீலன், ராஜா என்கிற பக்ருதீன் அலி அகமத், .எம்.தனசண்முகமணி, பி.ஜி.பாலாஜி, இசக்கிராஜா, .பி.மகேந்திரன், எஸ்.பிரப்தீஸ் சாம்ஸ், ஏ.ஏழுமலை, எஸ்.என்.ராஜராஜன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டனர். இந்த தேர்தலில் நடிகர் ரஜினிகாந்த், இயக்குநர் மிஷ்கின் போன்ற பிரபலங்கள் நேரில் வந்து வாக்களித்தனர்.

இந்த தேர்தலில் மொத்தம் 1,171 வாக்குகள் பதிவான நிலையில், 527 வாக்குகள் வித்தியாசத்தில் ஜி.எம்.தமிழ்குமரன் தலைவராக வெற்றி பெற்றுள்ளார். நலன் காக்கும் அணி சார்பாக தலைவர் பதவிக்கு போட்டியிட்ட ஜி.எம்.தமிழ்குமரன் 788 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்ட தேணாண்டாள் முரளி 241 வாக்குகள் பெற்று தோல்வி அடைந்துள்ளார்.




# பெரம்பூரில் விஜய் போட்டியிட த.வெ.க.,வினர் தீர்மானம்!



சென்னை, பிப். 23–

சென்னை பெரம்பூர் தொகுதியில், த.வெ.க., தலைவர் விஜய் போட்டியிட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சென்னை பெரம்பூர் தொகுதி த.வெ.க., செயல் வீரர்கள் கூட்டம், வியாசர்பாடியில் நேற்று நடந்தது. அதில், அக்கட்சியின் தேர்தல் பிரிவு மேலாண்மை பொதுச்செயலர் ஆதவ் அர்ஜுனா பேசியதாவது:

பெரம்பூரில் ஏன் கூட்டம் என பலரும் கேட்கின்றனர். பிகில் படத்தில் வில்லன் இடத்துக்கு விஜய் சென்று, கார் கதவை திறக்கும்போதே ஐந்து பேர் பறப்பர். அதேபோல, துறைமுகம் தொகுதியில் த.வெ.க., நிர்வாகிகள் தாக்கப்பட்டபோதே, வடசென்னையில் களமிறங்க விஜய் முடிவெடுத்தார்.

கடந்த 1962 முதல் சென்னை தி.மு.க., கோட்டை என்கின்றனர். ஆனால், இனி சென்னை த.வெ.க., கோட்டை. வறுமை அதிகமுள்ள இடத்தில், மக்களுக்கான தேவை அதிகமாக இருக்கும்; அங்கு போட்டியிட வேண்டும் என விஜய் சொல்வார்.

கொளத்தூர், ஆர்.கே.நகர் என, வடசென்னையில் ஒரு தொகுதியில் நிற்க வேண்டும் என்பது தான் விஜயின் விருப்பம். பெரம்பூர் தொகுதியில் விஜய் நிற்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். இவ்வாறு பேசினார்.

தொடர்ந்து, த.வெ.க., பொதுச்செயலர் ஆனந்த் பேசுகையில், ''ஆதவ் தீர்மானத்தை, எல்லாரும் மனதார ஏற்கிறோம்.

உங்கள் விருப்பத்தை விஜயிடம் சொல்வோம்,'' என்றார்.

த.வெ.க., நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: விஜய் போட்டியிடும் தொகுதி இன்னும் முடிவாகவில்லை. அந்த தொகுதியில் போட்டியிட, ஆதவ் அர்ஜுனா தான் விருப்ப மனு வழங்கி உள்ளார். அதனால் தான், பெரம்பூரில் கூட்டம் நடத்தி உள்ளார். விஜய் அங்கு போட்டியிடுவார் என சொன்னால், நிர்வாகிகள் சுறுசுறுப்பாக வேலை செய்வர். அதற்காகத்தான், பெரம்பூரில் விஜய் போட்டியிட தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். இவ்வாறு கூறினர்.

# 8-வது ஊதியக் குழு பரிந்துரை: மத்திய அரசு ஊழியர்களுக்கு லட்சக்கணக்கில் அரியர் தொகை வரப்போகுது..!

சென்னை, பிப். 23–

மத்திய அரசு ஊழியர்களுக்கான 7–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் கடந்த ஆண்டு (2025) டிசம்பர் மாதம் 31–ந் தேதியுடன் நிறைவடைந்தன. அதற்கு முன்னதாக, நவம்பர் 3–ந் தேதி நாடாளுமன்றத்தில் பேசிய நிதித்துறை இணை மந்திரி பங்கஜ் சவுத்ரி, “8–வது ஊதியக் குழு அமைக்கப்பட்ட நாளில் இருந்து 18 மாதங்களுக்குள் அதன் பரிந்துரைகளை அரசிடம் சமர்ப்பிக்கும்'' என்று தெரிவித்தார்.



அதன் அடிப்படையில், 8–வது ஊதியக் குழுவுக்கு தலைவர் மற்றும் சில உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால், ஊதியக் குழுவின் பரிந்துரை அமல்படுத்தும் தேதி இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

**சம்பள உயர்வு எவ்வளவு?**

அதே நேரத்தில், கடந்த கால நடைமுறைகளை பின்பற்றினால், திருத்தப்பட்ட ஊதிய அமைப்பு 2026–ம் ஆண்டு ஜனவரி 1–ந் தேதி முதல் நடைமுறைக்கு வர வாய்ப்பு உள்ளது. 8–வது ஊதியக் குழு அறிக்கை 18 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டாலும், அதை செயல்படுத்த கூடுதல் நேரம் ஆகலாம். இருப்பினும், அரசாங்கம் பரிந்துரைகளை எப்போது அங்கீகரித்தாலும், 2026 ஜனவரி 1–ந் தேதி முதல் அரியர் தொகை கணக்கிட்டு வழங்கப்படும் என நம்பப்படுகிறது.

இதன் மூலம் மத்திய அரசு ஊழியர்களுக்கு எவ்வளவு சம்பளம் உயரும்? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஏற்கனவே, 6–வது சம்பளக் குழு சராசரியாக 40 சதவீத சம்பள உயர்வை வழங்கியது. அதே நேரத்தில், 7–வது சம்பளக் குழு 23 முதல் 25 சதவீதம் என்ற அளவிலேயே சம்பள உயர்வை வழங்கியது. அதாவது, தற்போதைய பொருளாதார நிலை அடிப்படையிலேயே இது கணக்கிடப்படும் என்பதால் சற்று ஏற்ற இறக்கங்கள் இருக்க வாய்ப்பு இருக்கிறது.

**18 மாத கால அவகாசம்**

தற்போதைய நிலவரப்படி, 8–வது ஊதியக்குழு 20 முதல் 35 சதவீதம் அளவுக்கு சம்பள உயர்வை பரிந்துரைக்க வாய்ப்பு உள்ளது. ஆனால், கால அளவு இன்னும் 18 மாதங்கள் இருக்கும் நிலையில், பணவீக்கம், வரி உயர்வை பொறுத்து இதில் மாற்றம் ஏற்படக் கூடும். 8–வது ஊதியக் குழுவின் அடிப்படையில் மத்திய அரசு ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படுவது உறுதியானாலும், அரியர் தொகையை எவ்வாறு கணக்கிடுவது? என்ற கேள்வி பலருக்கு எழலாம்.

**அரியர் தொகையை எவ்வாறு கணக்கிடுவது?**

அரியர் தொகையை கணக்கிடுவது மிகவும் எளிது. முதலில், ஊழியரின் பழைய அடிப்படை சம்பளத்திற்கும் புதிய முன்மொழியப்பட்ட அடிப்படை சம்பளத்திற்கும் இடையிலான வேறுபாட்டை கணக்கிடவேண்டும். பிறகு இந்த வேறுபாடு சம்பள உயர்வு நிலுவையில் உள்ள மாதங்களின் எண்ணிக்கையால் பெருக்க வேண்டும்.

அடிப்படை சம்பளத்தின் அடிப்படையில் அகவிலைப்படி (டி.ஏ) தீர்மானிக்கப்படுகிறது. ஆகையால், புதிய அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படும்போது, அகவிலைப்படியில் உள்ள வித்தியாசமும் மொத்த நிலுவைத் தொகையுடன் சேர்க்கப்படுகிறது.

**லட்சக்கணக்கில் அரியர் தொகை**

தற்போது, நாளுக்கு நாள் அதிகரிக்கும் பணவீக்கம் மற்றும் விலைவாசிக்கு மத்தியில் 8–வது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நிதி நிலையை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. 8–வது ஊதியக் குழு 2027–ம் ஆண்டு மத்தியில் அல்லது 2028–ம் ஆண்டு தொடக்கத்தில் அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 10 ஆண்டு கால நடைமுறைப்படி, இதன் அமலாக்க தேதி 2026 ஜனவரி 1–ந் தேதி என அரசு அறிவித்தால், மத்திய அரசு ஊழியர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் லட்சக்கணக்கில் அரியர் தொகை கிடைக்கும்.

# பாம்பன் மீனவர்கள் 12 பேர் கைது: இலங்கை கடற்படை தொடர் அட்டூழியம்!

சென்னை, பிப். 23–

எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும், மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.

இதற்கிடையில், ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் துறைமுகத்திலிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். இந்த மீனவர்கள் அனைவரும் நடுக்கடலில் மீன்பிடித்தனர். இந்த நிலையில், டேவிட் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் சென்ற மீனவர்கள் தனுஷ்கோடி – தலைமன்னார் இடையே மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது ரோந்து கப்பலில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர், விசைப்படகை சுற்றி வளைத்தனர். அதில் இருந்த 12 மீனவர்களை எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி சிறைபிடித்து கைது செய்ததுடன், படகையும் பறிமுதல் செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மீனவர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

12 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தது அவர்களது குடும்பத்தினரையும், மீனவ மக்களையும் மிகுந்த சோகம் அடையச் செய்துள்ளது. மேலும் அவர்களை விடுவிக்க வேண்டும் என மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்து உள்ளன.

# “விரோஷ்”! திருமணத்திற்கு பெயரிட்ட விஜய் தேவரகொண்டா!



நடிகர் விஜய் தேவரகொண்டா திருமண நிகழ்வுக்கு பெயரிட்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நடிகர் விஜய் தேவரகொண்டா – ரஷ்மிகா மந்தனா இருவரும் இருவரும் நீண்ட காலமாக காதலித்து வந்த நிலையில், வருகிற பிப். 26 ஆம் தேதி ராஜஸ்தானில் உள்ள உதய்பூர் கோட்டையில் திருமணம் செய்துகொள்கி ன்றனர். இந்தியளவில் கவனிக்கப்படும் இந்த இணையின் திருமண நிகழ்வு பிரம்மாண்டமான முறையில் நடப்பதுடன் நாட்டின் முக்கிய பிரபலங்கள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

# ஜெ. பிறந்தநாள்: அ.தி.மு.க. முதல்கட்ட வேட்பாளர் பட்டியல்!

சென்னை, பிப். 23–

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78–வது பிறந்தநாள் விழா நாளை கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை கழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. நாளை காலை 10.30 மணிக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்வதற்காக கட்சி அலுவலகத்திற்கு வருகை தருகிறார்.



அப்போது அவருக்கு அ.தி.மு.க. நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளிக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து மறைந்த அ.தி.மு.க. தலைவர்களான எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க. கொடியையும் ஏற்றி வைக்கிறார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜெயலலிதா பிறந்தநாளின் போது எத்தனையாவது பிறந்தநாள் என்பதை குறிக்கும் வகையில் கேக் தயாரிக்கப்பட்டு தலைமை கழகத்தில் வைத்து வெட்டப்படுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு ஜெயலலிதாவின் 78–வது பிறந்தநாள் என்பதால் 78 கிலோ கேக்கையும் எடப்பாடி பழனிசாமி தலைமை கழகத்தில் வைத்து நாளை வெட்டுகிறார். இதன் பின்னர் அனைவருக்கும் இனிப்புகளும் வழங்கப்படுகின்றன. நலத்திட்ட உதவிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறது.

ஜெயலலிதா பிறந்த நாளையொட்டி எடப்பாடி பழனிசாமி முக்கிய அறிவிப்புகளையும் வெளியிட இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

அ.தி.மு.க. சார்பில் அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் ரூ.2000 வழங்கப்படும், ஆண்களுக்கும் இலவசமாக பேருந்து பயணம் என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை ஏற்கனவே வெளியிட்டுள்ள எடப்பாடி பழனிசாமி நாளை முதல் கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

அ.தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளுக்கு இடையே தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைகள் எதுவும் முடிவடையாத நிலையில் அ.தி.மு.க. முன்னணி தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகள் உறுதியாகி இருப்பதாகவும் அது தொடர்பான விவரங்களையே எடப்பாடி பழனிசாமி நாளை வெளியிட இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

# பிரேமலதா துணை முதல்மைச்சர் பதவி வேண்டும் என்று கேட்கிறார் - இ.பி.எஸ்.!

சென்னை, பிப். 23–

மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம் எழுச்சிப்பயணத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று பொன்னேரி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள திறந்தவெளி மைதானத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் எழுச்சியுரை மேற்கொண்டார்.



அப்போது பேசிய இபிஎஸ், ''இன்னும் இரண்டு மாதம் தான்... ஏப்ரலில் தேர்தல் வரும். இந்த தேர்தலில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மாபெரும் வெற்றியை தேடித் தரவேண்டும். நம் கூட்டணி வலிமையானது அதிமுக தான் தலைமை. வெற்றி பெற்று அதிமுக தான் ஆட்சி அமைக்கும், அதிமுக தலைவர் தான் முதல்வர்.

திமுக கூட்டணி அப்படியா இருக்கிறது? காங்கிரஸ் பங்கு கேட்கிறது. எப்போதும் உங்களுக்கு அடிமையாக இருக்கிறோம் என்று ஆட்சி அதிகாரத்தில் பங்கு, கூடுதல் இடம் என்று பிரச்னை. தேர்தல் வரை இந்தக் கூட்டணி நிலைக்குமா என்பதே கேள்விக்குறி ஆகிவிட்டது.


இரண்டு மாதம் முன்பு ஸ்டாலின் என்ன பேசினார்..? இபிஎஸ் கடையை விரித்து வைத்திருக்கிறார், யாரும் வரவில்லை என்றார். பலமான கூட்டணி அமைந்துவிட்டது. இது, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து மக்கள் விரோத திமுகவை அகற்ற வேண்டும் என்பதற்கு உருவான கூட்டணி. உங்கள் கூட்டணி அப்படியில்லை சுயநலம் நிறைந்த கூட்டணி. அதனால் தான் திமுகவின் நிலை தெரிந்து காங்கிரஸ் பங்கு கேட்கிறது, விசிக பட்டும் படாமலும், பங்கு இருந்தால் பரவாயில்லை என்று கேட்கிறார்கள்.

இப்போது புதிதாக ஒரு கட்சி சேர்ந்திருக்கிறது. அந்தம்மா மாநாடு நடத்தியபோது, அவர்களுக்கு துணை முதல்வர் பதவி வேண்டும் என்று கேட்கிறது. அப்படிப்பட்ட கட்சிகள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து கூட்டணி வைத்துள்ளன.

நம் கூட்டணி ஒரே நிலைப்பாடு அதிமுக ஆட்சிக்கு வரவேண்டும், மக்கள் விரோத திமுகவுக்கு நிரந்தர விடுதலை கொடுக்க வேண்டும். இதுதான் நம் கூட்டணிக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம். லேட்டாக கூட்டணி அமைத்தாலும் லேட்டஸ்டா அமைத்த கூட்டணி'' என்று தெரிவித்தார்.

# தமிழகம் முழுவதும் முடி மாற்று சிகிச்சை மையங்களுக்கு கட்டுப்பாடு!

சென்னை, பிப். 23–



தேசிய மருத்துவ ஆணையத்தின் விதிகளை கடைப்பிடித்தால் மட்டுமே முடி மாற்று சிகிச்சை மையங்களுக்கு பதிவு உரிமம் வழங்கப்படும்என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் திருத்த சட்டத்தின்படி, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் மட்டுமின்றி, சித்தா, ஆயுர்வேதம், ஹோமியோபதி, யுனானி மருத்துவமனைகளும் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் செயல்படும் முடிமாற்று சிகிச்சை மையங்களை முறைப்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும், பதிவு செய்வதில் சில சிக்கல்கள் இருப்பது தெரியவந்தது. அழகு நிலையங்கள், சருமப் பொலிவு மையங்கள் என்ற பெயரில் அவை செயல்படுவதால் சுகாதாரத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் வராததால், அதுபோன்ற மையங்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ அதிகாரிகளால் முடிவதில்லை. இதையடுத்து புதிய நடை முறைகளுடன் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, தேசிய மருத்துவ ஆணையத்தின் விதிகளை கடைப்பிடித்தால் மட்டுமே முடி மாற்று சிகிச்சை மையங்களுக்கு பதிவு உரிமம் வழங்கப்படும்.

மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் மட்டுமே சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். முன்னதாக சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நபரின் ஒப்புதலை அவசியம் பெற வேண்டும். சுகாதாரத்துறையால் கண்காணிப்புக்கும், ஆய்வுக்கும் உட்படுத்தப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ தகுதிகள் இல்லாமல் விதிகளுக்கு புறம்பாக சிகிச்சைகள் வழங்குவது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நபர் மற்றும் நிறுவனம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

# முன்னாள் ரயில்வே அமைச்சர் முகுல் ராய் காலமானார்!

கொல்கத்தா, பிப். 23–

முன்னாள் ரயில்வே அமைச்சர் முகுல் ராய் காலமானார். கொல்கத்தாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் திங்கட்கிழமை (பிப்.23) அதிகாலை 1.30 மணி அளவில் மாரடைப்பு காரணமாக அவர் உயிர் பிரிந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.




மேற்குவங்க மாநிலத்தில் மூத்த அரசியல் தலைவர்க ளில் ஒருவராக திகழ்ந்தவர் முகுல் ராய். திரிணமூல் காங்கிரஸ் கட்சி நிறுவப்பட்டது முதல் அக்கட்சியின் உறுப்பினராக இருந்தார். 1998 முதல் 2015 வரையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச்செயலாளராக இருந்தார். 2006 முதல் 2017 வரையில் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார். 2–வது ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மத்திய இணை அமைச்சர் மற்றும் ரயில்வே அமைச்சராகவும் இருந்துள்ளார்.

கடந்த 2017–ல் பாஜக–வில் அவர் இணைந்தார். 2021–ல் நடைபெற்ற மேற்குவங்க மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக போட்டியிட்டு கிருஷ்ணாநகர் தொகுதியில் வெற்றி பெற்றார். பின்னர் மீண்டும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

இந்தச் சூழலில் கடந்த சில நாட்களாக கோமா நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், மாரடைப்பு காரணமாக அவர் மரணம் அடைந்தார். அவரது மறைவுக்கு மேற்குவங்க மாநில அரசியல் கட்சி பிரமுகர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# ரயில் டிக்கெட்டுகள்: மார்ச் 1 முதல் வரப்போகும் மேஜர் மாற்றம்!!




சென்னை, பிப். 23–

இந்திய ரயில்வே,வரும் மார்ச் ஒன்றாம் தேதியில் இருந்து ரயில்வே டிக்கெட் பெறுவதில் மிகப்பெரிய மாற்றம் அமலுக்கு வர இருக்கிறது. அடிக்கடி வெளியூர் செல்பவர்களும், புறநகர் ரயில்களில் பயணம் செய்பவர்களும் இந்த மாற்றத்தை தெரிந்து வைத்துக் கொள்வது கட்டாயம். இல்லை என்றால் பெரும் சிக்கலுக்கு ஆளாக நேரிடலாம். அன்ரிசர்வ்டு டிக்கெட் மற்றும் பிளாட்பார்ம் டிக்கெட் , சீசன் பாஸ்களை பெற Unreserved ticketing system அதாவது யுடிஎஸ் ( UTS) செயலியை பயன்படுத்தி வருகிறோம். வரும் மார்ச் 1ஆம் தேதியிலிருந்து இந்த யுடிஎஸ் செயலி இயங்காது என இந்திய ரயில்வே அறிவித்திருக்கிறது. அதாவது வரக்கூடிய ஞாயிற்றுக்கிழமை முதல் இந்தியா முழுவதுமே யுடிஎஸ் செயலியின் சேவை நிறுத்தப்படுவதாக இந்திய ரயில்வே அறிவித்திருக்கிறது. அப்படி என்றால் அன்ரிசர்வ்டு டிக்கெட்டுகள் மற்றும் பிளாட்பார்ம் பாஸ்கள், சீசன் டிக்கெட்டுகளை எங்கே சென்று வாங்குவது என்ற சந்தேகம் ஏற்படலாம்.

இதற்கு இந்திய ரயில்வே அண்மையில் அறிமுகம் செய்த ரயில் ஒன் செயலியை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்திய ரயில்வே கடந்த ஆண்டு ரயில் ஒன் செயலியை அறிமுகம் செய்தது. ரயில்வே சம்பந்தப்பட்ட சேவைகளையும் ஒருங்கிணைத்த ஒரு பிரத்தியேக செயலியாக இது இருக்கிறது.. ரயில் ஒன் செயலியில் நாம் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ளலாம், உணவு ஆர்டர் செய்து கொள்ளலாம் ,நம்முடைய புகார்களை பதிவு செய்து அதற்கான நிவாரணத்தை பெறலாம்.

இதற்கு முன்பு ரயில்வே சம்பந்தப்பட்ட ஒவ்வொரு சேவைக்கும் ஒவ்வொரு செயலியை நாம் பயன்படுத்த வேண்டி இருந்தது. ஆனால் ரயில் ஒன் செயலி இவை அனைத்தும் ஒருங்கிணைந்த ஒரு செயலியாக இருக்கிறது. எனவே உங்கள் மொபைல் போனில் ரயில்வே சம்பந்தப்பட்ட அனைத்து செயலிகளையும் அன் இன்ஸ்டால் செய்துவிட்டு இந்த ரயில் ஒன் செயலியை இன்ஸ்டால் செய்து கொண்டால் போதும் என ரயில்வே கேட்டு கொண்டுள்ளது. அதிகபட்சமான பயணிகளிடம் இதனை கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காக யுடிஎஸ் செயலியின் பயன்பாட்டை நிறுத்துவதாகவும் அறிவித்துள்ளது. யுடிஎஸ் செயலியை பயன்படுத்தக்கூடிய பயணிகள் அதே லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை கொண்டு ரயில் ஒன் செயலியில் லாகின் செய்து பயன்படுத்தலாம் என தெரிவித்திருக்கிறது. மார்ச் 1 வரை காத்திருக்காமல் இப்போது ரயில் ஒன் செயலியில் அன்ரிசர்வ்டு, பிளாட்பார்ம் டிக்கெட்டுகளை பதிவு செய்து பழகி கொண்டால் சிரமங்களை தவிர்க்கலாம் என கூறுகிறது.


## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020